දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax ) 0112692913

විද්‍යුත් තැපෑල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ්අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

මගේ අංකය )
எனது இல ) **MA/MS/A/06/2024**
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 2024-06-13
Date )

**பொதுச் சுற்றுநிருபக் கடித இலக்கம்: 02-92/2024**

பிரதிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை தேசிய வைத்தியசாலை/ பணிப்பாளர், கண்டி தேசிய வைத்தியசாலை
அனைத்து மாகாண / பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,
அனைத்து போதனா/ மாவட்ட பொது வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
அனைத்து விசேட வைத்தியசாலைகள் / பண்முகப்படுத்தப்பட்ட பிரிவுகளின் தலைவர்கள்,
அனைத்து ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள்,
ஏனைய ஏற்புடைய அனைத்து நிறுவனத் தலைவர்கள்,
ஏற்புடைய அனைத்து வைத்திய உத்தியோகத்தர்கள்.

**இடைநிலைத் தரமொன்றின் உச்ச சம்பளப் படிமுறைக்கு வரும் உத்தியோகத்தர்களுக்கு அந்த உச்ச அளவு சம்பளப் படிமுறைக்கு அப்பால் சம்பள ஏற்றங்களை வழங்குவதற்கான பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 07/2019 இனை தரநிலை வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பதிலீடு செய்தல்**

மேற்குறித்த விடயம் தொடர்பிலான 08-07-2019 ஆந் திகதி கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 07/2019 மீது தங்களது தயவுமிகு கவனத்தினைத் திருப்புகின்றேன்.

02. குறித்த சுற்றுநிருபத்தின் 03 ஆம் பந்தியின் படி, அது வரையில் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இடைநிலைத் தரமொன்றின் உச்ச சம்பளப் படிமுறைக்கு வரும் உத்தியோகத்தர்களுக்கு அந்த உச்ச அளவு சம்பளப் படிமுறைக்கு அப்பால் சம்பள ஏற்றங்களை வழங்குவதற்கான அதிகாரம் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணியினர் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் அவ் அவ் அமைச்சுக்களின் செயலாளர்களிடத்தே கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

03. அதன்படி ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கு உரிய தரத்திற்கான சம்பளவேற்றப் பெறுமானத்தின் கீழ் சம்பளவேற்றங்களை வழங்கும் பொருட்டு என்னிடத்தே அங்கீகாரத்திற்காக அனுப்புகையில், மேற்குறித்த சுற்றுநிருபத்தின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டுமென இத்தால் அறியத் தருகின்றேன்.

04. பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 06/2006 செயல்வலுப் பெறும் திகதியான 01-01-2006 ஆந் திகதி முதல் இது வரையில் ஓய்வு பெற்றுள்ள தரநிலை வைத்திய உத்தியோகத்தர்களும் உள்ளடங்கலாக, இவ்வாறு அவர்களுக்குரிய சம்பளவேற்றங்களை தொடர்ச்சியாக பெற்றுக் கொடுத்திராத அனைத்து வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் நடந்துள்ள பாரபட்சத்தினை இதன் படி நிவர்த்தி செய்தல் வேண்டும்.

05. தற்சமயம் சேவையில் ஈடுபட்டுள்ள வைத்திய உத்தியோகத்தர்கள் தமது நடப்பு சேவை நிலையத்தின் தலைவர் ஊடாகவும், 01-01-2006 ஆந் திகதி முதல் இது வரையில் ஓய்வு பெற்றுள்ள வைத்திய உத்தியோகத்தர்கள் தாம் இறுதியில் சேவையாற்றிய சேவை நிலையத்தின் நிறுவனத் தலைவர் ஊடாகவும் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன், அதன் பொருட்டு இத்துடன் உள்ள இணைப்பு 01 இனை உபயோகித்தல் வேண்டுமென அவர்களை அறிவூட்டவும்.

வைத்தியர் பீ. ஜீ. மஹீபால,
செயலாளர் - சுகாதார அமைச்சு.

Dr. P. G. Mahipala
Secretary
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10. Sri Lanka.

பிரதிகள் -
01. மாகாண சுகாதார செயலாளர்கள் - தகவல் மற்றும் தகுந்த நடவடிக்கைகளுக்காக
02. பிரதம நிதி உத்தியோகத்தர், சுகாதார அமைச்சு - -அதே-
03. ஏற்புடைய அனைத்து சுகாதார நிறுவனங்களினதும் கணக்காளர்கள் - -அதே-

ඇමුණුම/இணைப்பு/Annexure - **01**

Through ………………………………..

……………………………………….

Secretary
Ministry of Health

Dear Sir/Madam

**Correction of Grade II Increment Anomaly**
**Dr. ………………………………………..**

I have been deprived of ……. increments in Grade II. Please be kind enough to take necessary steps to correct the aforesaid anomaly and place me on the correct salary step.

The details are as follows

| | | |
|---|---|---|
| 1 | Preliminary Grade Appointment Date | |
| 2 | Grade II Promotion Date | |
| 3 | Grade I Promotion Date | |
| 4 | Number of Years in Grade II | |
| 5 | Grade I Placement Salary Step | |
| 6 | Grade I Current Salary Step | |
| 7 | Number of Deprived Grade 2 Increments | |
| 8 | Current Post and Institution | |

I have not been subjected to suspension of increments on disciplinary grounds.

Thank you

………………………………..